දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA
CDCE

இளங்கலைமாணி முதலாம் ஆண்டுப் பரீட்சை (வெளிவாரி புதியபாடத்திட்டம்) (ஏப்ரல் 2017)

# ECNE 101 அறிமுகப் பொருளியல்

**அறிவுறுத்தல்கள்:**
**நான்கு** வினாக்களுக்க மட்டும் விடை தருக
நேரம்: மூன்று மணித்தியாலங்கள்
ஒவ்வொரு வினாவிற்கும் தலா 25 புள்ளிகள்

---

1. (i) அருமையான வளங்கள் தொடர்பாக 'இலவச மதிய உணவு போன்ற எதுவுமே இல்லை'. என்ற கூற்றினை விளக்குக.

   (ii) 'மூலதனப் பொருட்களில் முதலிடுதல், நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்தல் என்பவற்றுக்கிடையில் இன்று மேற்கொள்ளப்படக்கூடிய தெரிவானது, ஒரு பொருளாதாரத்தின் எதிர்கால உற்பத்தி ஆற்றலை பாதிக்கின்றது'. இதனை நீர் ஏற்பீரா? விளக்குக.

   (iii) வெவ்வேறு வகையான பொருளாதார முறைகளைப் பெயரிடுக. அவற்றின் பிரதான பண்புகளை அடையாளம் செய்க.

   (iv) சந்தைப் பொறிமுறையில், விலையானது அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்யும் சமிக்ஞையாகச் செயற்படுகின்றது. சந்தைகளில் ஒரு சமிக்ஞையாக விலை தொழிற்படுவதினை விளக்குக.

2 (i) கேள்வி விதிக்கும், கேள்வித் தொழிற்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடு யாது?

   (ii) ஒரு குறிப்பிட்ட பொருளின் விலைக்கும், அதன் கேள்வித் தொகைக்கும் இடையில் ஒரு நேர்த்தொடர்பு காணப்படக்கூடிய நிலைமைகள் எவை?

   (iii) பின்வரும் ஒவ்வொரு கூற்றுக்களினாலும் விபரிக்கப்படுகின்ற பொருட்களின் வகைகளை அடையாளம் செய்க.
   (அ) வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகமானது ஒன்றினைவிடக் குறைவாகக் காணப்படுகின்ற பொருள்
   (ஆ) வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகமானது ஒன்றினைவிடக் கூடுதலாகக் காணப்படுகின்ற பொருள்
   (இ) குறுக்கு விலைசார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகமானது நேர்க்கணியப் பெறுமதியினைக் கொண்டிருக்கும் பொருள்
   (ஈ) குறுக்கு விலைசார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகமானது எதிர்க்கணியப் பெறுமதியினைக் கொண்டிருக்கும் பொருள்

   (iv) ஒரு குறிப்பிட்ட பொருளின் சந்தைக் கேள்வி, சந்தை நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு:

$$Q^d = 600 - 10P$$

$$Q^s = 10P$$

   அரசாங்கம் இப்பொருளுக்கு ஒரு விலை ஆதாரத்திட்டத்தினை முன்னெடுத்து, ரூபா 50 என்ற உத்தரவாத விலையில் மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதாகக் கருதிக் கொள்க. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

...2

(அ) ஒரு வரைபடத்தில் தொடர்புடைய கேள்வி, நிரம்பல் வளைகோடுகளை வரைக.
(ஆ) சந்தையில் அரசாங்கத் தலையீடு ஏற்படுவதற்கு முன்னர் சந்தைச் சமநிலை விலை, சமநிலைத் தொகை ஆகியவற்றினைக் கணிப்பிடுக.
(இ) இப்பொழுது, அரசாங்கம் மேற்படி உத்தரவாத விலையில் மிகைநிரம்பலைக் கொள்வனவு செய்யுமாயின், இப்பொருளின்மீதான நுகர்வோர் செலவீட்டினையும், உற்பத்தியாளர் வருமானத்தினையும் கணிப்பிடுக.
(ஈ) நுகர்வோர் மிகை, உற்பத்தியாளர் மிகை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கணிப்பிடுக.

3. (i) பின்வரும் எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.
(அ) அசாதாரண இலாபமும், சாதாரண இலாபமும்
(ஆ) வெளிப்படையான செலவுகளும், உட்கிடையான மறைமுகச் செலவுகளும்
(இ) சராசரி உற்பத்தியும் ( $AP_L$ ) எல்லை உற்பத்தியும் ( $MP_L$ )
(ஈ) ஒரு உள்ளீட்டின் விளைவும், அளவுத்திட்ட விளைவும்

(ii) ஒரு நிறுவனத்தின் சராசரி மாறும் செலவு (AVC) வளையி, சராசரி நிலையான செலவு (AFC) வளையி, சராசரி மொத்தச் செலவு (ATC) வளையி, எல்லைச் செலவு (MC) வளையி என்பவற்றினை ஒரே படத்தில் கற்பிதமாக வரைக.

(iii) அதில், எல்லைச் செலவு (MC) வளையியின் அதிதாழ் புள்ளியானது ஏன் சராசரி மொத்தச் செலவு (ATC) வளையியின் அதிதாழ் புள்ளிக்கு இடப்புறமாக அமைந்து காணப்படுகின்றது என்பதனை விளக்குக.

(iv) அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு, மாறா அளவுத்திட்ட விளைவு, குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு என்பவற்றிற்கு வரைவிலக்கணங்கள் தருக.

(v) 'நீண்ட காலத்தில், நிறுவனம் ஒன்றின், எல்லாச் செலவுகளும் மாறும் செலவுகளே ஆகும்.' விளக்குக

(vi) ஒரு சந்தையின் போட்டித் தன்மையின் அளவினை நிர்ணயிப்பவை எவை?

4. (i) பிரதான பேரினப் பொருளாதார இலக்குகளை அடையாளம் செய்க.

(ii) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.

(iii) வாழ்க்கைத் தரத்தினை அளவிடுவதற்கு, மெய்த் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஏன் ஒரு சிறந்த அளவீடு அல்ல என்பதற்கு இரு காரணங்கள் தருக.

(iv) பின்வரும் எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாடுகளை அடையாளம் செய்க.
(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியும், மொத்த தேசிய உற்பத்தியும்
(ஆ) தனிநபர் வருமானமும் செலவிடக்கூடிய வருமானமும்
(இ) தேறிய ஏற்றுமதியும் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானமும்
(ஈ) அரசாங்கத்தின் மொத்த வரி வருமானமும், அதன் தேறிய நேரில் வரி வருமானமும்

(v) இலங்கையின் தேசிய கணக்கீட்டு முறையில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களை விளக்குக.

5. (i) ஒரு பொருளாதாரம் தொடர்பான பின்வரும் தகவல்களை கவனத்தில் கொள்க. (தொகைகள் மில்லியன் ரூபாவில்)

| | | | |
|---|---|---|---|
| நுகர்வு | (C) | = | 100+0.75Yd |
| முதலீடுகள் | (I) | = | 75 |
| வரி வீதம் | (t) | = | 10% |
| மாற்றல்கள் | (TR) | = | 100 |
| அரசாங்கச் செலவீடு | (G) | = | 100 |

(அ) எல்லை நுகர்வு நாட்டம் (MPC), சராசரி நுகர்வு நாட்டம் (APC), எல்லைச் சேமிப்பு நாட்டம் (MPS), சராசரிச் சேமிப்பு நாட்டம் (APS) என்பவற்றிற்கு வரைவிலக்கணங்கள் தருக.

(ஆ) தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தினை நிர்ணயிக்குக.

(இ) தொடர்புடைய வருமானப் பெருக்கியின் பெறுமதியினைக் கணிப்பிட்டு, அதற்கு விளக்கம் தருக.

(ஈ) தொடர்புடைய பாதீட்டுப் பற்றாக்குறையினைக் கணிப்பிடுக

(உ) மேற்படி தேசிய வருமானச் சமநிலையினை ஒரு வரைபடத்தின் மூலம் காண்பிக்குக.

(ii) பணநிரம்பலிலான ஒரு அதிகரிப்பு பணவீக்கத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய நிலைமைகளை விபரிக்குக.

6 .பின்வருவனவற்றுள் எவையேனும் **<u>ஐந்தினை</u>** சுருக்கமாக விளக்குக:

(i) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்
(ii) நிறைபோட்டிச் சந்தையின் பண்புகள்
(iii) பிரதியீட்டுப் பொருள்களும் இணைப்புப் பொருள்களும்
(iv) இறைக் கொள்கையும் நாணயக் கொள்கையும்
(v) சந்தைத் தோல்வி
(vi) பணத்தின் தொழிற்பாடுகள்
(vii) வீடுகளுக்கான கேள்வியினை நிர்ணயிக்கும் காரணிகள்

---